**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2020**

---

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

## 2.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

---

அதிகாரசபையினால் இறுதியாக தயாரித்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
| --- | --- |
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 7,476,170 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 154,219,287 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 561,941 |
| மொத்த சொத்துக்கள் | **162,257,398** |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 49,798,341 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 5,919,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 106,540,060 |
| மொத்த பொறுப்புக்கள் | **162,257,401** |
| மொத்த வருமானம் | 33,245,125 |
| மொத்த செலவினம் | 29,599,492 |
| மிகை | **3,645,633** |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் | (i) 2015 முதல் 2019 | இது தொடர்பாக | நிதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரமாணம் 103, 104 மற்றும் 110 | | வரையான காலப்பகுதியில் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 203,890 பெறுமதியான இரண்டு லெப்டொப் கணனிகள் மற்றும் ரூபா 61,900 பெறுமதியான இரண்டு டெப் கணனிகள் என்பன தொலைந்து போயிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 110 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக முகாமைத்துவத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நாரஹேன்பிட்ட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பொலிஸ் அறிக்கை இது வரையிலும் கிடைத்திருக்கவில்லை. பொலிஸ் அறிக்கை கிடைத்தவுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | PD – 6379 ஆம் இலக்க கெப் வண்டி தலைவரால் ஓட்டிச் செல்லும் சந்தர்ப்பத்தில் நீர் போதியளவில் இடாமையினால் வாகனத்தின் என்ஜினுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொளள்ப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்ப்பதற்கு செலவாகிய ரூபா 498,110 தொகையை தலைவரிடமிருந்து அறவிட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பணத்தை வழங்குமாறு அறிவித்து பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்காமையினால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு ள்ள தொகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி சட்டம் மற்றும் 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி பத்திரம் | பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 ஆன முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 69 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,208,000 கொடுப்பனவுகளுக்குரிய முத்திரைக் கட்டணம் கழிக்கப்பட்டிருக்க வில்லை. | இதில் காண்பிக்கப்பட்ட கொடுப்பனவுகளில் 69 சந்தர்ப்பங்களில் 68 சந்தர்ப்பங்கள் பட்டதாரி தொழில்முயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பட்டதாரிகளுக்கு பணம் வழங்கப்பட்டதாகும். எனினும் ரூபா 25 முத்திரைக்கான விற்பனையொன்று இடம்பெறவில்லை. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு சந்தைகளில் வெற்றியீட்டக்கூடிய உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெயியில் அமைத்தல் மற்றும் அமுல்படுத்துவதை ஆர்வமூட்டுவதற்காக ஊக்குவித்தல். | Business delegation என்ற நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் வெளிநாட்டுத் தொழல்நுட்பத்தை நாட்டிற்கு கொண்டுவருதலும், உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை சர்வதேசத்திற்கு கொண்டு செல்லலும் செயற்படுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளில் இந்த பணிகளுக்காக Canton (china) என்ற சர்வதேச | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

வியாபாரக் கண்காட்சிக்காக உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர். விசேடமாக 2019 ஆம் ஆண்டு முதல் "Made in Sri Lanka " வர்த்தகத் தலைப்பில் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை உள்நாட்டு சந்தையைப் போன்று வெளிநாட்டு சந்தைகளுக்கும் எடுத்துச்செல்வதற்கான இயலுமை ஏற்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அந்த உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகியிருந்தது. மேலும் அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற "Made in Sri Lanka" வர்த்தக கண்காட்சி உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு சந்தைகளையும் இலக்காகக் கொண்டு அமுல்படுத்துப்படுவதுடன் தமது உள்நாட்டு உற்பத்திகளை சுற்றுலா பயணிகளுக்கு அனுப்புவதன் மூலம் சர்வதேச சந்தைப்படுத்தல் தொடர்பொன்றை கட்டியெழுப்புவதற்கான இயலுமை கிடைத்திருந்தது. அவ்வாறே "Made in Sri Lanka" அதிகாரம் பெற்ற விற்பனைக் கடைகளை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு அதிகாசபை திட்டமிட்டிருந்ததுடன்

| | | | |
|---|---|---|---|
| | | அதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களை நேரடியாக வெளிநாட்’டு சந்தையுடன் தொடர்பொன்றை கட்டியெழுப்புவதற்கான கருவியொன்றாக சந்தைச் சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தது. | |
| (ii) | தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரிமையின் வணிகமயப்படுத்தலுக்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றைத் தாபித்தல். | தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திக்கான ஜேர்மன் செயற்திட்டம் (GIZ) மற்றும் ஒன்றிணைந்து செற்படுகின்ற அந்த தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை தாபிப்பதற்காக அந்த நிறுவனம் கணிசமான தொகையொன்றை கோரியிருந்தமையால் பணிப்பாளர் சபைக்கு (முன்னாள்) மற்றும் அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கான அங்கீகாரம் கிடைக்காமையினால் அந்த நிதியத்தை தாபிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் நிறுவனத்தால் பிரதேச தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் முயற்சியாளர்களின் தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரிமையைப் பெற்றுக்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்கள் எழுந்திருந்தன. மேலும் “Made in Sri Lanka | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ''வர்த்தக தலைப்பின் மூலமும் தொழில் முயற்சியாளர்களின் தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி போன்ற பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது. மேலும் தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மாகந்துரே இல் அமைந்துள்ள முன் வளர்ச்சி நிலையம் மூலம் நிறைவேற்ற முடியும். | |

## 3.2 முற்பண கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வழங்கப்பட்ட முற்பணம் செலவிடப்படாமல் 22 நாட்கள் முதல் 148 நாட்கள் வரையான காலம் நிறுத்தி வைக்கப்பட்டு முழுமையாகத் தீர்க்கப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 537,400 ஆகும். | 2020 ஆம் ஆண்டில் பரவிய கொரோனா தொற்றுநோயின் காரணமாக திட்மிடப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் கொரோனா தொற்று நோயின் காரணமாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதனால் வழங்கப்பட்ட முற்பணத்தை மீண்டும் தீர்க்கவேண்டி ஏற்பட்டிருந்தது. கொரோனா தொற்று நோயின் காரணமாக அலுவலகத்தை உரிய நேரத்தில் நடாத்திச் செல்வதற்கு முடியாமையின் காரணமாக தீர்ப்பதற்காக சிறிது காலம் எடுத்திருந்தது. | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து முற்பணம் வழங்க வேண்டியிருந்ததுடன் உரிய பணி நிறைவேற்றப்படாதிருக்குமாயின் பெறப்பட்ட முற்பணம் கூடிய விரைவில் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 372,281 தொகையும், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,939,410 தொகையும், 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,862,852 தொகையும் ஆன முற்பணங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிற்குரிய தீர்ப்பதற்குள்ள முற்பணத்தின் பெறுமதி ரூபா 372,281 தொகையும், 2018 ஆம் ஆண்டிற்குரிய தீர்ப்பதற்குள்ள முற்பணத்தின் பெறுமதி ரூபா 1,939,410 தொகையும் காணப்பட்டதுடன் இந்த முற்பணத்தொகையும் பிரதேச செயலகங்களினாலும், மாவட்ட செயலகங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்டவையாகும். 2019 ஆம் ஆண்டிற்குரிய தீர்ப்பதற்குள்ள முற்பணத்தின் பெறுமதி ரூபா 1,862,852 ஆகும். மேற்கூறப்பட்டுள்ள முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் கணக்காண்டின் போது முற்பணக் கணக்கின் பெறுமதியை பூச்சியப் பெறுமதியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட முற்பணம் வழங்கப்பட்ட பணி நிறைவுபெற்றவுடன் தீர்த்து வைக்கப்படுவதை கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |